**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 178 /2025 , Mangalamedu P.S. PW -6.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | M.கொளஞ்சியப்பன் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | மாயவேல் | Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | : | மங்களமேடு | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 53 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.06.2026 | | | | | |

1,4,6 எதிரிகள் ஆஜர். 2,3,5 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 30.06.2020 ம் தேதி மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அனாம் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையத்தில் வந்து மனு ரசீது எண். 231/2020 என்ற எண் கொடுத்து வைக்கப்பட்டிருந்த கோப்பினை பரிசீலனை செய்து அதன் தன்மையின் அடிப்படையில் மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 1211/2020 இதச பிரிவுகள் 147,294(பி),323,506(1) ன் படி வழக்கு பதிவு செய்தேன். நிலையத்தில் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. பின்னர் வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சையது அமீர், சையது ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் அனாம், அகமது பாட்ஷா, சையது அமீர், சையது கலாம், சையது கமால் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சம்பவத்தில் காயமடைந்து நபர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் ரமேஷ் மற்றும் முருகானந்தம் ஆகியோரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய , காயச்சான்றுகளை பெற்றேன்.

DMCJM COURT, KUNNAM

3. இவ்வழக்கின் எதிரிகளை 30.06.2020 ம் தேதி அன்று கைது செய்து தக்க காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தவகையில் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 147,294(பி), 323,506(1) ன் படி குற்றமென கடந்த 12.02.2021 ம் தேதி எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் முதல் தகவல் அறிக்கையில் 30.06.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதே தினத்தில் தான் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன். என்றால் சரிதான். குற்ற நிகழ்வு நாள் 27.04.2020 இரவு 7.45 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த அனாம் என்பவரிடம் தான் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 வாக்குமூலத்தில் எங்களை போக்குவண்டி மூலம் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாக வாக்குமூலம் பெற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே பாதை பிரச்சனை இருப்பதாக அறிந்து கொண்டேனா என்றால் சிவில் பிரச்சனை இருப்பது தெரிந்து கொண்டேன். அது சம்பந்தமாக சிவில் வழக்கு ஏதேனும் உள்ளதா என்பது குறித்து ஆவணங்களை பெற்று புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். போக்கு வாகனம் எது என்று யார் காயமடைந்த நபர்களை சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்று விசாரித்து அறிந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் 1–ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண். 1212/2020 வழக்கின் புகார்தாரர் அனாம் மற்றும் சிலர் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் அனாம் வகையறா குற்றத்தை ஒப்புக்கொண்டு அபாரதத்தினை நீதிமன்றத்தில் செலுத்தினார்கள் என்றால் சரிதான்.

3. வாலிகண்டாபுரத்தில் உள்ள பள்ளிவாசல் சம்பந்தமாக முத்தவள்ளி பிரச்சனையில் தமிழநாடு வக்ப் வாரியத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் வக்ப் வாரியத்தில் இருந்து வழக்கறிஞர் வந்து சம்பவ இட பகுதியினை அளந்து பிரச்சனை எதுவும் இல்லை என்று வக்ப் வாரியத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறுதி குற்ற அறிக்கையினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 27.01.2025 ம் தேதி நான் மங்களமேடு காவல்

DMC MUNIYAM

நிலையத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். நான் 27.01.2025 ம் தேதி அன்று பணியில் இல்லாதபோது இறுதி குற்ற அறிக்கை மங்களமேடு உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளேன் என்றும், நீதிமன்றத்திற்கு 27.01.2025 ம் தேதி இறுதி குற்ற அறிக்கை வரப்பெற்றது என்றால் சரியல்ல. நான் எந்த வித சம்பந்தமும் இல்லாதபோது அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது எந்தவித விசாரணையும் இன்றி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUM COURT, KUNNAM